33

காலணா

Regd. No. M. 2811.

# சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே '


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

Acc-No-10813

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மண்யன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 15-4-33

## ' ரவிக்கைக் கமிட்டியா ? '




கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டியைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கும் ராம்சே மாக்டனால்டைப் பார்த்து ஹால்ஸ்பரி பிரபு " என்ன ஐயா கமிட்டி யென்ற ரவிக்கைக்குள் புகுந்து கொள்கின்றீரே !" என்று கேலி செய்தார். கூட்டுக் கமிட்டி ரவிக்கைக் கமிட்டியாயினும் பாவாடைக் கமிட்டியாயினும் அதில் கூட வோட் செய்ய இந்தியப் பிரதிநிதிகளுக்கு அதிகார மில்லையாம். கயிற்றால் கைகளைக் கட்டிக்கொண்டு கமிட்டியில் உட்காருவதற்காக ஒரு கூட்டம் இந்தியாவினின்று போகவேண்டுமோ ?

## நாமென்ன மிருகங்களா ?

"தேடு கல்வி யில்லாத ஒர் ஊரைத் தீயி னுக்கு இரையாக்க" வேண்டு மென்று கவிஞர் பாரதியார் ஆத்திரத்தோடு எழுதிச் சென்ருர். இந்தியாவில் 100க்கு 92 பேர் எழுத்து வாசனை யில்லாதவர்க ளென்று கணக்கு கூறுகிறது. இப்படி வாழ்வது மனித ஜன்மத்துக்கு தகுதியா? "மானமற்று விலங்குக ளொப்ப மண்ணில் வாழ்வதை வாழ் வெனலாமோ ?"

உலகில் மற்றெல்லா நாடுகளேயும் விட எழுத் தறிவற்ற கூட்டம், 'ஞான பூமி' என்று புகழ் பெற்ற பாரத நாட்டில் இருப்பது நமக்கு வெட்கக் கேடாகும்.

| | | எழுத்து வாசனை யில்லதாவர்கள் |
|---|---|---|
| இத்தாலியில் | 100-க்கு | 27 பேர் |
| கிரீஸில் | ,, | 43 ,, |
| ருஷியாவில் | ,, | 48 ,, |
| எகிப்தில் | ,, | 85 ,, |
| இந்தியாவிலோ | ,, | 90 ,, |

(Figures from whitaker's Almanack 1933)

1931-ம் வருஷத்தில் எடுக்கப்பட்ட ஜன கணிதியின்படி பார்க்கப் போனல் இந்தியாவில் 100-க்கு 92 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியா தென்று ஏற்படுகிறது.

இந்தியாவின் மொத்த ஜனத் தொகை 352,837,778

அதில் எழுதப் படிக்கத் தெரிந்த வர்கள் குழந்தைகள் உள்பட 28,131,315தான்.

அதாவது 100-க்கு எட்டு பேருக்குத் தான் எழுத்து வாசனை !

ஒரு காலத்தில் அமெரிக்காவில் நீகிரோக் களை ஆடு மாடுகள் போல விற்பனை செய்து கொண்டிருந்தனர். 1865-ம் வருஷத்தில் அங்கு அடிமை வியாபாரத்தை அடியோடு நிறுத்தினர் கள். பிறகு தான் நீகிரோக்களுக்குக் கல்வி புகட்டத் தொடங்கினர். இந்த 65 வருட காலத்துக்குள் அங்குள்ள நீகிரோக்களில், 100-க்கு 84 பேர் எழுத்து வாசனை யடையு மாறு செய்திருக்கின்றனர். அதே மாதிரி ருஷி யாவிலும் 100-க்கு 99 பேர் எழுத்து வாசனை யில்லா திருந்ததை சில வருஷங்களுக்குள் மாற்றி விட்டனர். இப்போது கிழவன் கிழவி களும் கூட இனமாகக் கல்வி கற்றுக் கொள்ள ஸோவியத் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கின் றதாம். ஆனல் இந்தியாவின் கதி என்ன? இவ்வளவு அஞ்ஞானம் இந்த நாட்டில் இருப்ப தற்குக் காரணம் யார் ?

இந்தியாவில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் இருந்ததாக 1813-ல் ஸர் தாமஸ் மன்ரோ சொல்லிப் போனன். ஆனல் 150 வருடப் பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பின்னர் இன்னமும் 100-க்கு 92 பேர் மிருகப் பிராயத்தி லிருக்கின்ரே மென்ருல் அவ்வளவுக் கும் தற்போதைய ஆட்சி முறையே காரணம்.

முக்கியமாக இந்தியாவின் தாழ்த்தப்பட்ட மக்களுள் 1000-க்கு 999 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அந்த ஹரிஜனங்களுக்கு எழுத்தறிவிட்பதை விட வேறு புண்ணியமும் வேண்டுமா ?

## மண்டூகப் பத்திரிகை

கல்கத்தா ஐரோப்பியச் சங்கத்தினர் 'ரிவியூ ஆப் இந்தியா' என்ற ஒரு பத்திரிகையை நடத்தி வருகின்றனர். அதில் பின்வரும் வரிகள் காணப்படுகின்றன.

"இந்தியாவின் பத்திரிகை யுலகத்தில் 'ரிவியூ ஆப் இந்தியா'மேன்மையாக இருந்து வருகிறது. ஏராளமான பிரதிகள் செலவாகி வருகின்றன. இந்தப் பத்திரிகையை விட அதிகமான என் ணிக்கை ஐரோப்பியர் நடத்தும் பத்திரிகை களுக்குத்தான் இருக்கின்றது. சிக்கிரத்தில் 'ரிவியூ ஆப் இந்தியா'வின் ஒவ்வொரு இதழும் பதினயிரம் காப்பிகளுக்குமேல் செலவாகு மென்று எதிர்பார்க்கப்படுகிறது." என்று அப் பத்திரிகை தற்புகழ்ச்சி செய்து கொண் டிருக்கிறது. இந்தத் தற் புகழ்ச்சியைக் கண் டித்து 'அமிருத பஜார்' பத்திரிகை ஒரு உதார ணத்தோடு எழுதி யிருக்கிறது.

ஒரு சிறிய கிணற்றின் ஓரத்தில் தவளைக் குஞ்சொன்று உட்கார்ந்திருந்ததாம். "இந்தப் பெரிய சமுத்திரத்தின் ஒரு கோடியில் நான் உட்கார்ந்திருக்கிறேன். இன்னெரு கோடியில் எங்க அண்ணு தவளை உட்கார்ந்திருக்கிருர். ஆகவே நாங்களிருவரும் தான் உலகத்துக்கு அரசர்கள்" என்று அது சொல்லிற்ரும்.

'ரிவியூ ஆப் இந்தியா'என்ற கிணற்றுத் தவளை, 'ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை' என்ற அண் ணுவையும் தன்னையும் இப்படியா புகழ்ந்து கொள்ள வேண்டும் ? பதினயிரம் பிரதிகள் செலவாவதை பீற்றலாகச் சொல்லிக் கொள் ளும் இந்தப் பத்திரிகை, 40 ஆயிரம், 30 ஆயி ரம் 20 ஆயிரம் வீதம் செலவாகும் தேசீயப் பத்திரிகைகளை யெல்லாம் மறந்து பேசுவது ஒரு விநோதம் தான் !

## வழக்கமான பல்லவி

கல்கத்தா காங்கிரஸைப் பற்றிய செய்திகள் சர்க்கார் சல்லடை வழியாக வெளி வந்தவையே என்று தான் ஊகிக்க வேண்டி யிருக்கிறது. அன்று 'அஸோஸியேட் பிரஸ்' காங்கிரஸ் தீர்மானங்களை குறித்துப் பத்திரிகைகளுக்குத் தந்த செய்திகள் "சர்க்கார் அனுமதி பெற்றவை" என்று குறிக்கப்பட்டிருந்தன. மேலும், 'பிரீ பிரஸ்' ஆசிரியர் சதானந்தருக்கு காங்கிரஸ் செய்தியை வெளியிடுவது சம்பந்தமாகக் கட்டுப்பாட்டு உத்திரவொன்று போடப்பட்டதன்றோ! ஆகையால், காங்கிரஸ் செய்திகளில் எவ்வளவை தபால் பெட்டிகளும், தந்திக் கம்பிகளும் கபளீகரம் செய்து ஏப்பம் விட்டிருக்கின்றனவோ தெரியவில்லை. இது நிற்க,

பண்டித மாளவியாஜீ, ஐக்கிய மாகாணத்திலிருந்து கல்கத்தாக் காங்கிரசுக்கு வந்த பிரதிநிதிகள் போலீஸாரால் அக்கிரமமாகத் தாக்கப்பட்டதாக ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். 89 பிரதிநிதிகள் ஜெயில் பஸ்ஸிலிருந்து இறங்கி சிறைக்கூடத்திற்குப் போகும்பொழுது, மூவர் அடிக்கப்பட்டு, ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்களாம். பவானிபூர் போலீஸ் தாணாவுக்கு 180 பிரதிநிதிகளை அழைத்துச் செல்லும் பொழுது, போலீஸாரின் தடிப் பிரயோகத்தால் 40 பேருக்குக் காயமாம். பவானிபூர் தாணாவிலுள்ள வேறு 21 பேருக்கும் அடியாம். இவ்விவரங்களை மாளவியாஜீயின் அறிக்கை கூறுகிறது.

மாளவியாஜீயின் இவ்வறிக்கையைக் கண்ட இந்தியா சட்ட சபை உறுப்பினரில் 24 பேர் இதை உள் நாட்டிலாகா மெம்பருக்கு அனுப்பி விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். சர்க்கார் மெம்பர், "இதை மாகாண அரசாங்கத்தாருக்கு அனுப்பி விட்டோம்" என்று தாமதமின்றிப் பதில் சொல்லி விட்டார்.

சாதாரணமாக, நிராயுத பாணிகளான, அமைதியான ஜனங்களின் கூட்டத்தைத் தடி கொண்டு கலைப்பதே அநியாயம் என்று சட்ட நிபுணர்கள் சொல்லுகிறார்கள். கைதியாயிருப்பவர்களை அடிப்ப தென்றால், அது மிகக் கொடிய அக்கிரமமாகும். அவ்வாறிருந்தும் இந்திய சர்க்கார் பழைய பல்லவியையே பாடி விட்டது. மாகாண அரசாங்கம் என்ன செய்யும்? அது கீழதிகாரிகளுக்கு அனுப்பும். சர்க்காருக்குத் தைரிய மிருந்தால், ஏன் ஓர் பாரபட்சமற்ற கமிட்டியை நியமிக்கலாகாது?

## அத்தையும் மனைவியும்

வங்காளி பாஷையில் ஒரு சிறிய தமாஷ் நாடகம் எழுதப் பட்டிருக்கிறது. அதன் கதை பின் வருமாறு: நிமி தத்தன் என்பான் பெரிய குடிகாரன். அவன் வீட்டிலேயே ஓர் இளம் பெண் இருந்தாள். நிமி தத்தனுக்கு அவள் அத்தை உறவு. ஆயினும் அந்தப் பாவி அவள் மீது கண் போட்டு விட்டான். சில போக்கிரிகளை நியமித்து அவளைத் தூக்கிக் கொண்டு வர ஏற்பாடு செய்திருந்தான். போக்கிரிகள் ஒரு பெண்ணைத் தூக்கிக் கொண்டு வந்த தென்னவோ வாஸ்தவம். நிமி அவளிடம் சென்று பார்த்ததில் அவள் அத்தையன்று; நிமியினுடைய மனைவியையே அந்தப் பயல்கள் கொண்டு வந்து விட்டார்கள்.

அந்தப் பெண் தன் புருஷனைச் சும்மா விடுவாளா? "கையில் போட்டுக் கொண்டிருக்கிறாயே கடியாரம் அது அத்தை யுடையதல்லவோ?" என்று கேட்டான் நிமி. "ஆமாம்! அத்தை வெளியே போகும்போது வீட்டில் அதை வைத்து விட்டுப் போனாள், நான் எடுத்துக் கையில் கட்டிக் கொண்டேன்." என்று மனைவி பதில் கூறினாள். அந்தப் பாழுங் கைக் கடியாரம் இந்த மாதிரி விஷமம் செய்து விட்டது கண்டு நிமி நொந்து கொண்டான். அதே கதை போல சமீபத்தில் ஒரு உண்மைச் சம்பவம் நடந்திருக்கிறது.

காளி காங்குலி என்பவர், துப்பறியும் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர். கான்பூரினின்று கல்கத்தாவுக்கு வந்து கொண்டிருந்தார். யாஸின் அலிகான் என்ற ஸி. ஐ. டி. அவரை ஒரு காங்கிரஸ் பிரதிநிதி என்று சமுசயித்து கைது செய்து விட்டாராம். பிறகு தான் இந்தத் தவறு வெளியாயிற்று.

'அத்தை யல்ல, அகமுடையாள்' என்று தெரிய வந்தது. —அ. ப. பத்திரிகை.

### கிறிஸ்தவர்கள் ஆலயப் பிரவேசம்

வைதிகத்துக் கிருப்பிடமான வேதாரண்யம் கோவிலில் 6-4-33ல் தஞ்சை கலெக்டர், வேதாரணியம் மாஜிஸ்திரேட்டு, தாசில்தார் (எல்லோரும் கிறிஸ்தவர்கள்) முதலியவர்கள் சென்று தீர்த்தங்களையும், மூர்த்திகளையும் பார்வையிட்டுச் சென்றனர்களாம். அன்னிய மதத்தினர்களுக்கு, ஆலயப் பிரவேசத்துக்கு இடமளிக்கும் வைதிகர்கள் இந்து மதத்தினரான ஹரிஜனங்களுக்கு மட்டும் ஏன் அநுமதி கொடுக்கக் கூடாதென்று ஒரு நிருபர் கேட்கின்றார்.

## பம்பாய் ஒப்பாரி !

“சட்ட மறுப்பு இயக்கமா? அதை அடியோடு தொலைத்து விட்டோமே. காங்கிரஸா? அதை இருந்த விடந் தெரியாது நசுக்கிப் புதைத்து விட்டோமே” என்று இந்தியா மந்திரி ஹோரும் வில்லிங்டன் மகாப் பிரபுவும் திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள். இது வறட்டு ஜம்பமா, உண்மையா என்பதை நாம் கூற வேண்டியதில்லை. பம்பாய் அரசாங்கம் 1931-32-ம் வருடத்திய நிர்வாக அறிக்கையைப் பார்த்தாலே தெரியும். ஒவ்வொரு இலாகாவையும் பற்றி அவ் வறிக்கை சொல்லுவது பின்வருமாறு.

போலீஸ், ஜெயில் இலாக்காக்கள் :—“ஒவ்வொரு இலாகாவின் வருமானமுமே சட்ட மறுப்பியக்கத்தினால் குறைந்து விட்டது. போலீஸ், ஜெயில் போன்ற இலாக்காக்களின் செலவோ அவ்வியக்கத்தினால் அதிகரித்தது.”

கல்வி இலாகா :—“காலேஜ் மாணவர்கள் குறைந்து விட்டார்கள். சட்ட மறுப்பியக்கமும் ஒரு காரணம்.”

கலால் இலாகா :—“கடுமையான மது விலக்குப் பிரசாரமும் மறியலும் காங்கிரஸால் நடத்தப்பட்டன. அநேக ஜில்லாக்களின் நகரங்களில் மதுக் கடைகள் மறியல் செய்யப் பட்டன. கன்னடம், தார்வார், பெல்காம், ஸதாரா ஜில்லாக்களில் கள்ளு மரங்களையும் வெட்டி விட்டார்கள்.”

வருமான வரி இலாகா :—“இவ்வருஷத்தில் வருமான வரி மிகவும் குறைந்து விட்டது. முக்கியக் கடைகளில் தொடர்ச்சியான ஹார்த்தால்கள் நடந்தது இதற்கு ஓரளவு காரணமாகும்.”

காட்டிலாகா :—“ஏற்கனவே வியாபார மந்தம். இதை அரசியல் கிளர்ச்சி பலப்படுத்தி விட்டது. அதனால், வழக்கமாகக் கிடைத்து வந்த வருமானம் தடைப்பட்டு விட்டது.”

இத்தனையும் புலம்பிவிட்டு, கடைசியில் சர்க்கார் அறிக்கை என்ன சொல்லுகிறது தெரியுமா? “சட்டத்தால் அமுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் பிடியை விட்டால் என்ன கதி நேருமோ? அநேக இடங்களில் சட்ட மறுப்பு உணர்ச்சி உள்ளுக்குள் புகைந்து கொண்டிருக்கிறது. சட்டத்தின் பிடியை விட்டால், அது மறுபடியும் கிளம்பி விடும்” என்றே கூறுகிறது. இந்தியா மந்திரி கூறுவது சரியா, பம்பாய் சர்க்கார் அறிக்கை சொல்லுவது உண்மையா?

## காக்கை ஆர்டினன்ஸ்

(பியாரா எழுதியது)

ஆர்டினன்ஸ், லாக் ஆப், சாட்டையடி இந்த சம்பிரமங்கள் ராஜீய வாதிகளுக்குத் தான் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. “காக்கை குருவி எங்கள் ஜாதி” என்று ஒரு மனிதன் கவி பாடிச் சென்றானும். ஆனால் அவசரச் சட்டம், அடைத்துப் போடுதல், சவுக்கடி முதலியவைகளில் மனிதனோடு சம உரிமையை காக்கை குருவிகளுக்கும் கொடுத்தாக வேண்டு மன்றோ!

இந்தியாவிலிருந்து லண்டனுடன் பேசுவதற்காக ‘டெலிபோன்’ ஸர்விஸ் ஏற்படுத்தினார்கள். ஸிம்லாவிலிருந்து சமாசாரம் முதலில் ஆக்ராவுக்கு வந்து, பிறகு வடமதுரை, பம்பாய் வழியாகப் பூனாவை அடையும். அங்கிருந்து இங்கிலாந்திலுள்ள கிரிம்ஸ்பிக்கு என்ற விடத்தை கம்பி யில்லாத் தந்தி மூலமோ, தந்தி யில்லாக் கம்பி மூலமோ அடையும். ஏற்பாடுகளெல்லாம் ஆகிவிட்டன. இனி இதைத் திறந்து வைக்க வேண்டியதோ, பேச வைக்க வேண்டியதோ, அந்த விழாதான் பாக்கி. இராஜப் பிரதிநிதி ‘ஹல்லோ ! ஹல்லோ மாக்டனால்டு ! ஹோர் !” என்று முதலில் பேசுவதாக இருந்தார். ஆனால் திடீரென்று குறிப்பிட்ட தினம் ஒத்திப் போடப்பட்டு விட்டது. ஏன் ஐயா தாமதம்? ‘காக்கைளின் உபத்திரவத்தால் இந்தத் தாமத மேற்பட்டிருப்பதாக’ ஒரு நிருபர் எழுதியிருக்கிறார்.

சமுத்திரம், பூமி, ஆகாயம் மூன்றிடங்களிலும் ஆதிக்கம் செலுத்தி வரும் ஓர் ஏகாதிபத்தியத்துக்கு விரோதமாக சில கறுப்பு ஜந்துக்கள், ஒற்றைக் கண் காக்கைகள் வேலை செய்வதா? தந்தியைத் தடுப்பதா? கம்பியில் உட்கார்ந்து உட்கார்ந்து கெடுப்பதா? இஷ்டப்படி ஆகாயத்தில் சஞ்சரிக்க இந்த ஜந்துக்களை இனி அநுமதிக்கலாமா?

சென்னையில் ஐரோப்பியர் பந்து விளையாடும் சங்கம் ஒன்று உண்டு. அந்த அழகான கட்டடத்தைக் காக்கைகள் பாழ் படுத்துவதாக நினைத்து அவ்வப்போது காக்கை வேட்டைகள் நடப்பதுண்டு; ‘ஜாலியன் வாலா பாக்’ நடப்பதுண்டு. அந்த மாதிரி இந்திய துரைத்தனம் காக்கைகளைக் கொன்று சாய்க்காவிடினும் அவசரச் சட்டமாவது போட்டுத் தடுக்கலாமல்லவா? கறுப்பு வர்ணமுடைய ஜந்துக்கு இவ்வளவு திமிரா?

## ஐரோப்பாவுக்கு அறிவுறுத்தல்

சென்ற மாதத்தில் ஜினிவா நகரத்தில் உலகத்து அறிஞர்கள் சிலர் கூடி இந்திய விஷயங்களைப் பற்றிப் பிரசங்கித்தார்கள். ரோமேன் ரோலந்து அவர்களின் சகோதரியான மாதலின் ரோலந்து அன்று காந்தியடிகளைப் பற்றி அழகான பிரசங்கம் செய்தாள். மிஸ் வில்கின்ஸன் இந்தியாவின் சுதந்திர யுத்தத்தைப் பற்றிப் பேசினாள். இந்தியாவைப் பற்றித் தப்புந் தவறுமாகப் பல வித எண்ணங்கள் ஐரோப்பாவில் பரவி யிருக்கின்றன. அந்தத் தப்பெண்ணங்களைப் போக்குவதற்காக டாக்டர் எட்மண் பிரிவாதர் என்பார் ஒரு பிரசங்கம் செய்தார். அப் பேச்சின் சுருக்கம் பின்வருமாறு:

1. இந்திய மக்களுக்கு ஆங்கிலேயர் எப்போதும் பிரதிப் பிரயோசனத்தை எதிர்பாராமல் நன்மையே செய்து கொண்டிருக்கிறார்களாம்! அப்படியானால் இந்தியர் சுதந்திரம் விரும்பிப் போர் தொடப்பானேன்?

2. இந்தியாவில் புத்த மதம் தான் பிரதான மதமென்று சில ஐரோப்பியர் சொல்கின்றனர். இந்தியாவில் நூற்றுக் கணக்கான மதங்கள் இருப்பதால் ஒருவரோடொருவர் அடித்துக் கொள்கின்றன ரென்று வேறு சில ஐரோப்பியர்களும் கூறுகின்றனர். இந்த இரண்டும் தப்பபிப்பிராயமே.

3. நூற்றுக் கணக்கான பாஷைகள் இந்தியாவில் இருப்பதால் ஒற்றுமைக்கே வழி யில்லையென்கின்றனர். அப்படியானால் காங்கிரஸ் மகா சபையின் திட்டங்களை அகில இந்தியாவும் பின் பற்றுவது பொய்யா?

4. அநாகரிக மக்களென்றும், விக்ரக ஆராதனைக்காரர்களென்றும், குழந்தைகளுக்கு கல்யாணம் செய்து வைக்கும் கூட்டமென்றும், பலவிதமாக இந்தியாவைத் தூஷிக்கின்றனர். எல்லாம் மிகைபடக் கூறப்படும் வம்புகளேயன்றி வேறில்லை.

5. இந்தியருக்கு ஆளும் திறமையே கிடையாதென்று ஐரோப்பாவில் பிரசங்கம் செய்யப் பட்டிருக்கிறது. அந்தப் பிரசாரத்தை எதிர்த்து மிஸ்டர் பிரிவாதர் அன்று நன்றாகப் பேசினார்.

முடிவுரையில் காந்திஜியின் மகத்தான இயக்கம் உலகத்தின் யுத்தத் திமிரை ஒழிப்பதற்காக ஏற்பட்டுள்ள ஓர் ஆயுத மென்றும் வருணித்து பிரிவாதர் பேசி முடித்தார். இதைக் கேட்ட பின்னராவது ஐரோப்பாவுக்கு விஷயம் விளங்கி யிருக்குமா?

## "துரைச் சித்தம்,—க்ஷணப் பித்தம்"

கூட்டுப் பார்லிமெண்டரி கமிட்டியை நியமித்தாகி விட்டது. அதற்கு முன் சாக்ஷியம் கொடுப்பதற்காக சில இந்தியர்களை இழுத்துக் கொண்டு போகப் போகிறார்களாம். கமிட்டியில் வோட் செய்யும் உரிமை இந்தியர்களுக்குக் கிடையவே கிடையாதென்று அழுத்தமாகச் சொல்லி விட்டார்கள். எவ்வெப்போது இந்தியர்களைக் கூப்பிடுகின்றார்களோ அவ்வப்போது மட்டும் இந்தியர் உள்ளே போய் சொல்ல வேண்டுவனவற்றைச் சொல்லி விட்டு உடனே திரும்பி விட வேண்டியது தான். இந்த அவமானமான நிலைமைக்கு உட்படுவதாக இசைந்துள்ள சாப்ரூ, கேல்கர், அம்பேத்கர் கூட்டத்தைக் கண்டு பேடியும் நகைப்பாளன்றோ!

சீமையில் துரைத்தனத்தை எந்தக் கேள்வி கேட்டாலும் உடனே அதிகாரிகள், "அது கூட்டுக் கமிட்டி தான் நிர்ணயிக்க வேண்டும்" என்று சாக்குக் கூறி வருகின்றார்கள். இந்த சாக்குப் போக்கை கண்டிக்க முற்பட்ட ஹால்ஸ்பரி பிரபு அன்று ஒரு விநோத உதாரணம் தந்தார். "எதற்கெடுத்தாலும் கமிட்டி யென்ற ரவிக்கைக்குள் புகுந்து கொள்கின்றீர்களே!" என்று கேலி செய்தார்.

மூன்றாவது வட்ட மேஜை ரகஸ்யமாக நடைபெற்றதால், 'கோஷா மகா நாடு', 'பர்தா கான்பரன்ஸ்' என்று வருணிக்கப் பட்டது. இப்போது இந்தக் கூட்டுக் கமிட்டிக்கு 'ரவிக்கைக் கமிட்டி' என்ற பெயர் தரப் பட்டிருக்கிறது, ஆனால் இந்த ரவிக்கைக் கமிட்டி மீது மோகம் பிடித்து ஓடத் தலைப்பட்டுள்ள இந்திய ஜீவன்களை இந்தியாவில் மட்டு மல்ல, இங்கிலாந்திலும் கேலி செய்கின்றனர்.

அந்தக் கமிட்டியில் வெள்ளைக் கடுதாசியையும் பற்றி ஆலோசிப்பார்களாம். வெள்ளைக் கடுதாசியி லிருப்பதை விட, ஆங்கிலேயருக்கு இன்னும் அதிகாரங்கள் வேண்டு மென்று டோரிகள் கூச்சலிடுகின்றனராம். ஆகவே வெள்ளைக் கடுதாசிக்கு மேலே ஒரு சொள்ளைக் கடுதாசியை பிரிட்டன் வெளியிடப் போகிறது. 'துரைச் சித்தம் க்ஷணப் பித்தம்' என்பார்கள். அதே மாதிரி ஸைமன் அறிக்கை முதல் வெண் காகிதம் வரை, எத்தனை அறிக்கைகள் மாறி மாறிக் கிளம்பிக் கொண்டே யிருக்கின்றன. அதிகாரப் பித்தம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. நல்ல பித்தமையா இது!

## மேயரின் புது வேஷம்

(திப்பு எழுதியது)

எல்லோருக்கும் பொறுமை பொங்கி வயிறு வெடிக்காதா? செட்டி நாட்டு குமார ராஜா சென்னைக் கார்ப்போரேஷனின் தலைவரான உடன் அவருக்கு 'மேயர்' என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. இனி மேயருக்கு புதிசு புதிசாக சட்டை, ஆபரணம் முதலியவைகளைச் செய்து போடவேண்டுமென்று ஓர் ஆலோசனை புறப்பட்டிருக்கிறது. புதுச் சட்டை என்றால் குழந்தைகூட பொறுமைப் படாதா? தங்கச் சங்கிலி என்றால் பெண்டுகள்கூட பொறுமைப் படுவார்களன்றோ!

ஒரு நகரத்தின் 'மேயர்' என்றால் அது மிகவும் உயர்ந்த ஸ்தானமாம். அதற்குத் தகுந்தாற்போல தடபுடலான ஆடைகளைக் கட்டிக் கொண்டு அவர் கொலு வீற்றிருக்க வேண்டுமாம்! மேயர் அழகாகவும் ஒழுங்காகவும் நாற்காலியில் உட்கார்ந்தால் தான், ஊர்க் குழாய்களில் ஒழுங்காய் தண்ணீர் வருமென்கிறார்கள். ஆகவே கட்டாயமாய் மேயருக்கு புது மாப்பிள்ளை போல வேஷம் போட்டுத் தான் ஆக வேண்டுமாம். இந்தப் புது மேயருக்குப் புது வேஷம் போட்டுப்பார்த்தே தீருவதென்று சிலர் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதாகக் கேள்வி.

மேயருக்கு வேஷம் போட என்னென்ன சாமான்கள் வாங்கப் போகின்றனர் தெரியுமா? இரண்டு நீளமான கவுன்கள் தைக்க வேண்டுமாம். ஒரு கவுன் 'வெல்வெட்' துணியிலிருக்கும். ஒரு கவுனுக்கு அடியில் ஒரு இஞ்சு தங்கச் சரிகையும், இன்னொரு கவுனுக்கு அடியில் 2 இஞ்சு சரிகையும் வைத்துத் தைக்க வேண்டுமாம். காஞ்சிபுரம் கருடஸேவையின் பட்டைச் சரிகைக்கு மேல் பளபளப்பா யிருக்குமன்றோ! முக்கியமான வெல்வெட் கவுன் போட்டுக் கொண்டால் உடம்புக்கு வழு வழு வழ வழ வென்று வெகு சுகமா யிருக்குமே; இந்த சுகத்தை யார்தான் அறியார்? என் பெண்ணுக்கு 'கவுன்' வாங்கலாமென்று நான் ஒரு தடவை கடைக்குப் போனேன். அவள்கூட 'வெல்வெட்' கவுனைத் தான் பொறுக்கி யெடுத்தாள். அது போல் மேயருக்கு 'வெல்வெட்' கவுன் ரொம்ப அழகாயிருக்குமென்பதில், ஐயமில்லை. அது தவிர 'செட்டி நாட்டு' இளவரசருக்கு சாதாரண சரீரம் தான். முன்னொரு காலத்தில் உஸ்மான் சாயபு கார்ப்போரேஷன் தலைவரா யிருந்தபோது அவருக்கு வெல்வெட் கவுன் தைத்திருந்தால் எவ்வளவு துணி வேண்டி யிருக்குமோ அதில் முக்கால் வாசி செட்டியாருக்குப் போதுமான தென்று தையற்காரன் சொல்கின்றான். எப்படியானு லென்ன? மேயருக்கு கவுன்கள் நிச்சயம் கிடைக்கும்.

தலைப்பாகையை மாற்றாதபோனல் மேயருக்கு புது அழகு இருக்காதாம். ஆகவே அவர் தலையில் என்ன குல்லா தைத்துப் போடுவதென்று ஆலோசித்தார்கள். சரிகைத் தலைப்பாகை, இல்லாத போனல் கருப்பு வெல்வெட் ஹாட்! ஆனல் மேயருக்கு இரண்டையும் ஒன்றன் மீதொன்றாக வைத்துக் கொண்டால் இன்னும் அழகாயிருக்கு மென்று ஓர் பல்லி சொல்கிறது. இந்தச் செலவுகளுக்காக கார்ப்போரேஷன் பணத்திலிருந்து 300 ரூபா தர வேண்டுமென்று ஒரு அங்கத்தினர் பிரேரித்தார். "சாதாரண பிரதிநிதிகளுக்கும் கார்ப்போரேஷன் புதுச் சட்டை தைத்துத் தரலாகாதா?" வென்று ஒரு அங்கத்தினரின் மனது பொறுமிக் கொண்டிருந்ததாம். ஆனல் பயந்து கொண்டு அவரது வாய் சொல்ல வில்லை போலும்!

முக்கியமான தினங்களில் மேயர் மார்பில் ஒரு மெடல் தொங்க விட்டுக் கொள்ளவேண்டுமாம். ஒரு தங்கச் சங்கலியும் செய்து போடப் போகிறார்களாம். பிற நாடுகளில் மேயர்களுக்கு ஸர்வாதிகாரங்க ளுண்டு. அதற்கு அறிகுறியாக தங்கச் சங்கிலி போன்ற 'ஜபர் தஸ்து' களுமுண்டு. இந்தியாவிலுள்ள மேயர்களோ அரசாங்கத்துக்கு ஒத்துப் பாடியே தீரவேண்டுமென்பதை நாமறிவோம். ஆனல் அதற்காக 'சங்கிலி' போன்ற வெளி வேஷம் கூட இருக்கலாகாதா என்ன?

மெடலில் சென்னையின் மேயர் என்று எழுதியிருக்குமாம். சென்னைக் கார்ப்போரேஷன் கட்டடத்தின் படமும் அந்த மெடலில் போட்டிருக்குமாம். நமக்கென்னமோ இந்த யோசனை பிடித்தமா யில்லை. ஆபீசுகளில் உள்ள 'டவாயத்து'களின் வில்லைகளில் "இன்ன ஆபீஸ்காரன்" என்று எழுதி யிருக்கும். இந்த விவகாரத்தை ஒரு பெரிய நகரத்தின் தலைவரான மேயருக்கும் செய்வதென்றால் அது விஷமமான ஆலோசனை என்று தான் தோன்றுகிறது. "இந்தச் சங்கிலி கார்ப்போரேஷனின் சொத்தாக இருக்கும்; மேயருக்கு மேயர் கொடுக்கப்பட்டு தொடர்ந்து பரம்பரையாக இருந்து கொண்டிருக்கும்" என்று அன்று சொன்னர்கள். ஒரு பிஸாத்து தங்கச் சங்கிலியை கார்ப்போரேஷனுடையது

## கல்கத்தாவே ருஜு

கவர்ன்மெண்டார் ஒரு புறம் அடக்கு முறையையும், மறு புறம் சீர்திருத்த முஸ்தீப்புகளும் செய்கிறார்களாம். இந்த இரட்டைக் கொள்கையால், தாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு ரொம்ப அதிகமாக வெற்றி கிடைத்து விட்டதாம். இந்தியா மந்திரி முதல் துவங்கி, ஜில்லா மாஜிஸ்திரேட்டுகள் வரைக்கும் எல்லா உத்தியோகஸ்தரும் எல்லாரும் சலிப்படையும்படி இந்தப் பல்லவியையே பாடி வருகிறார்கள். கல்கத்தாவில் சர்க்கார் என்ன நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று? சர்க்கார் கொள்கை அடியோடு தோற்று விட்டதென்பதற்கு அதுவே ருஜுவல்லவா? சர்க்கார் உண்டாக்கி யிருக்கும் சமாதானம் எப்படிப்பட்டது? ஜனங்கள் திருப்தி யடைந்ததால், ஏற்பட்ட சமாதானமா இது? அல்லவே யல்ல. ஆனல் பாழான பாலைவனத்தில் நிலவும் சமாதானமே யாகும்.

—'ஹிந்துஸ்தான் டைம்ஸ்.'

---

என்று வற்புறுத்தித் தீர்மானத்தில் போட வேண்டுமோ என்ன?

மேயரின் அந்தஸ்துக் கேற்றாற்போல ஒரு தண்டாயுதத்தைச் செய்யப் போகிறார்களாம். அந்தக் குண்டாந்தடியைத் தூக்க ஒரு கட்டியக்காரனும் வேண்டுமாம். அவனுக்கு 25 ரூபா சம்பளமாம். மேயருக்கென்று, ஸ்பெஷல் நாற்காலி யொன்றும் அஸ்மானகிரி யொன்றும் போட வேண்டுமென்றும் ஆலோசித்திருக்கிறார்கள்.

இதை யெல்லாம் கேட்கும்போது சென்னை மாகாணத்தில் உள்ள அத்தனை முனிஸிபல் சேர்மேன்களும் பொறுமைப் பட்டுக் கொண்டிருப்பார்கள். எல்லாரும் 'மேயர்களெ'ன்று தங்களைச் சொல்லிக்கொள்ளலாகாதா? கவுன், சங்கிலி, தடி எல்லாம் வைத்துக் கொள்ளலாகாதா? ஜனத் தொகை மிகுந்த ஊரின் தலைவனுக்குத் தான் 'மேயர்' பட்டமுண்டு என்கிறார்கள். ஆகவே தங்கள் தங்கள் நகரத்தின் ஜனத் தொகையை விர்த்தி செய்வதற்கு எல்லோரும் வழி தேடட்டும். கர்ப்பத் தடை முறைகள் தங்கள் ஊர்களில் பரவாமலாவது பார்த்துக் கொள்ளட்டும்! பிறகு சென்னை மேயரின் வேஷத்திற்கு ஆசைப்படட்டும்!

## சட்ட சபையில் "டேட்டு"

(கபாலி எழுதியது)

தெருவில் ஏதாவதொரு வீட்டில் குடும்பக் கலகம் ஏற்படா விட்டால், ஊரிலுள்ளோர் வாழ்க்கை சுகப்படாது. மனைவியும் கணவனும் அடித்துக் கொள்வதிலும், தகப்பனும் பிள்ளையும் தகரார் செய்து கொள்வதிலும் தான் ஊராருக்குத் தமாஷ்! இந்த மாதிரி சமீபத்தில் நான் ஒரு சினிமாப் படம் பார்த்தேன். படம் வெகு தமாஷா யிருந்தது. நாற்காலி, மேஜை யெல்லாம் பறந்தன. தோசைமா, துடைப்பு ஆகியவை யெல்லாம் வான சஞ்சாரம் செய்தன. இந்த மாதிரி காட்சிகள் இந்தியச் சட்ட சபையில் நடப்பதற்குத் தேசியவாதிகள் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தியா சட்ட சபையில் முக்கிய எதிர்க் கட்சிக்காரர்களின் தலைவரான ஸர் ஹரிசிங் கவரும் உப தலைவரான ஸ்ரீமான் ரங்கையரும் இப்பொழுது "டேட்டு" விட்டிருப்பதாகத் தோன்றுகிறது. சில தினங்களுக்கு முன் இந்தியா சட்ட சபையில், "நேற்று நடந்த எங்கள் கட்சிக் கூட்டத்தில்" என்றார் கவர். "எங்கள் கட்சிக் கூட்டம் நேற்று நடக்கவில்லை" என்றார் ஐயர். "நடந்தது" என்று மறுபடி உறுமினார் கவர். "காரியதரிசியே இல்லை யென்கிறீரே" என்றார் ஐயர் கட்சியைச் சேர்ந்த ஒருவர். கட்சியின் காரியதரிசி, ஐயர் வசமாகி விட்ட சங்கதி அக் கட்சியின் தலைவரான கவருக்குத் தெரியாமல் நடந்து விட்டதாகத் தோன்றுகிறது.

புதிய வருமான வரி மசோதாவுக்குத் திருத்தமொன்று வந்தது. எதிர்க் கட்சியார் ஓட்டு எடுக்க வேண்டு மென்றார்கள். கவர் அந்த சமயத்தில் தான் உள்ளே வந்தார். வெகு வேகமாக வோட்டுப்போடப் போனார். ஐயர் கோஷ்டியாருக்குத் தமாஷாச் செய்ய ஆசை யுண்டாகி விட்டது போலிருக்கிறது. அவர்கள், "கப், சிப்" என்று சும்மா இருந்து விட்டார்கள். வோட்டு எண்ணப்பட்டது. இது வரையிலேயே இல்லாத ஒரு விநோத சம்பவம் ஏற்பட்டது. ஸ்ரீயுத கவர் கொடுத்த வோட்டு ஒன்று தான் எதிர்க் கட்சி வோட்டா யிருந்தது. எல்லாரும் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள். கவர் மாத்திரம் "இஞ்சி தின்ற குரங்கு மாதிரி" சும்மா உட்கார்ந்திருந்து விட்டார்.

---

## ஆரோக்கிய வழி

தபாற்கூலி யுள்பட 5 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

## தேசியக் கொடி கிலி

பரமக்குடியில் திரு விழாவுக்காகப் போடப் பட்ட பந்தலின்மேல் தேசியக் கொடி கட்டப் பட்டிருந்ததைப் போலீசார் வந்து கொடியை அப்புறப் படுத்திவிட்டு, கடைக்காரர்களேயும் எச்சரிக்கை செய்து விட்டுப் போயினராம்.

காங்கிரஸ் காரியாலயத்துக்காகப் போடப் பட்டிருந்த கொட்டகையை வக்கில் சங்கத்தார் வந்து காங்கிரஸ்காரர்களின் அநுமதி யன்னி யில் பிரித்து விட்டார்களாம்.

### சரோஜினி தேவி விடுதலை

ஏரவாடா சிறையினின்று சரோஜினி தேவி விடுதலை யடைந்து விட்டார். அவர் வெளியில் வந்ததும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் "பட்சிகளும், மரங்களும் என்னை வரவேற்றன. பூனவை விட்டுப் போகும் வரையில் வீதிகளில் தான் நான் இருப்பேன்" என்று சொன்ன ராம். அவரது கணவன் நோயாக விருப்ப தால் உடனே ஹைதராபாத்துக்கு அவர் செல்வாரெனத் தெரிகிறது.

### தண்டனை

லாகூருக்கு ராஜப் பிரதிநிதி சென்றபோது கருப்புக் கொடி ஊர்வலம் நடத்தி ஆர்ப்பாட் டம் செய்ததாக இருவர் கைது செய்யப்பட்டு ஒரு வருஷத்துக்கு நன்னடக்கையுட னிருப்ப தாக 1000 ரூ. ஜாமீன் கேட்கப்பட்டார்கள். இருவரும் ஜாமீன் கொடுக்க மறுத்து தலா ஒரு வருஷம் வெறுங்காவல் தண்டனை யடைந்தனர்.

கடைத்தெருவில் ஊர்வலம் சென்றதற்காக கண்ணனூரில் இருவர் கைதியாயினர். மது ரைக் கடுத்த வேளாளப்பட்டியில் கைதியான 4 தொண்டர்களுக்கும் கிரிமனல் லா சட்டப் படி தலா 3 மாதம் கடுங்காவல். குண்டூரில் கெ. சம்பத் குமாராச்சாரி யென்பவருக்கு 6 மாதமும், 200 ரூ. அபராதமும். துண்டுப் பிர சுரம் வழங்கியதற்காக இருவர் கைது செய்யப் பட்டு விடுவிக்கப்பட்டனர்.

பம்பாயிலும், சுற்று வட்ட விடங்களிலும் புரட்சி இயக்கப் பிரசுரங்கள் வழங்கப் பட்டது சம்பந்தமாக பூனவில் கணேச தாமோதர சாவர்க்கர் என்பவர் கைது செய்யப்பட்டு அவர் வீடும் சோதனை யிடப்பட்டது. கணேசர், அந்த மான் தண்டனை யனுபவித்துத் திரும்பியவ ராவர். இவர் ரத்னகிரியில் வைக்கப்பட்டுள்ள விநாயக தாமோதர சவர்க்கரின் சகோதரர் ஆவர்.

### சாப்பாடு போட்டதாக

குரும்பாநாடு தாலுக்கா நடுவாஹூர் அம்சம் அதிகாரி ஸ்ரீமான் பரமேசுவர மூஸாத் என்ப வர், சில தினங்களுக்கு முன் காங்கிரஸ் ஜாதா வுக்கு சாப்பாடு போட்டதற்காகக் கைது செய் யப் பட்டார்.

### ஜப்தியும், ஏலமும்

நன்னிலம் தாலுக்காவில் தீபங்குடி, செம்மங் குடி நெய்க்குப்பை முதலிய கிராமங்களில் கிஸ்தி கட்ட முடியாததால் பலருடைய வெள் ளி, பித்தளைப் பாத்திரங்கள் ஜப்தி செய்யப்பட் டன. அவைகளை ஒருவரும் ஏலம் கேட்காததி னால் வெளி யிடங்களுக்கு அனுப்பி ஏலம் போ டச் செய்யலாமா என்று அதிகாரிகள் யோசிக் கின்றனராம். ஏலம் கேட்காத சாமான்களைச் சர்க்கார் ஆதாயம் செய்யப்படும் என்று கூட நோட்டீஸ் ஒட்டப் பட்டிருக்கின்றதாம்.

### மாளவியாவுக்கு வரவேற்பு

ஹரித்துவாரத்தில் பண்டித மாளவியாவின் வருகையை முன்னிட்டு அவரை யானையின் பேரில் ஏற்றி நடத்தப்பட்ட ஊர் வலத்தில் ஒரு லக்ஷத்து 50 ஆயிரம் பேர்கள் கலந்து கொண்டனராம். ஜய கோஷம் வானைப் பிளந்ததாம். ஆண்டவனின் சர்வ வியாபகத் தன்மையைப் பற்றியும் உலக சகோதரத்துவத் தைப் பற்றியும் மாளவியா ஒரு உபன்னியாசம் செய்தாராம்.

---



---

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.